Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | ASSISTANT SESSIONS JUDGE,<br>KULITHALAI. |
| Calendar | |
| Miscellaneous | Case No.**S.C. 08/2020** |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution அசா. 5<br><br>Defense<br><br>Court |
| Name | விஜயகுமார் |
| Father's Name | மாணிக்கம் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.12.2021.** | |

முதல் விசாரணை

நான் புலரங்கப்பட்டியில் வசித்துவருகிறேன். நான் கூலிவேலை செய்துவருகிறேன். அ.சா.2 இந்திரா எனது உடன்பிறந்த சகோதரி ஆவார். நான் சம்பவம்பற்றி தொலைபேசி மூலம் தகவல் தெரிந்து மறுநாள் அதவாது 20.05.2019 காலை 6.00 மணிக்கு நானும் எனது பெரியம்மா மகன் ரங்கதுரையும் எட்டமநாய்க்கன்பட்டியில் உள்ள எனது அக்கா இந்திரா வீட்டிற்கு சென்றோம். நானும் ரங்கதுரையும் சென்றபோது தோகமலை காவல் ஆய்வாளர் சம்பவஇடத்தில் நின்றுக்கொண்டிருந்தார். ஆய்வாளர் சம்பவஇடத்தில் வரைபடம் தயார் செய்தார். அது சம்பந்தமாக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான் அது அ.சா.ஆ.2. அதன்பிறகு காலை சுமார் 7.30 மணியளவில் சம்பஇடத்தில் இருந்த ரத்தக்கரை படிந்த மண் மற்றும் இரத்தக்கரை இல்லாத மண் இரண்டையும் கைப்பற்றினார்கள்.

என்னிடம் காட்டப்படுவது என் முன்பு கைப்பற்றிய மண் தான் அது முறையே சா.பொ.4 மற்றும் சா.பொ.5. மேலும் ஆய்வாளர் காலை 7.45 மணியளவில் அறுவாளை கைப்பற்றினார். அது சம்பந்தமாக என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான் அது அ.சா.ஆ 3. போலீஸாரர் என்னை விசாரித்தார்கள்.

ஒம்/விஜயகுமார்

ஒம்/M.சண்முககனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.